21.10.2024

O.S.No.313/2017

வா.சா.1.திரு.ராமர் த.பெ. காத்தட்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. இந்த தாவா தாக்கல் செய்வதற்கு நான்தான் எனது வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேன். என் தாயார் அழகம்மாள் 2012ம் ஆண்டு இறந்து போனார், அவரது இறப்பு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தகப்பனார் வாரிசு சான்றிதழையோ, தாயார் வாரிசு சான்றிதழையோ நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் எனது கைவசம் உள்ளது. அட்டப்பட்டி கிராம சர்வே எண்.379/9-ல் மொத்தம் 87 சென்டு என்றால் சரிதான். மேற்படி 87 சென்டுசொத்து ஆதியில் எந்த எண் பட்டாவில் இருந்தது என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், அது எனக்கு தெரியாது. மேற்படி 87 சென்டில் யார் யாருக்கு எவ்வளவு சென்டு பாத்தியம் என்றால், எங்களுக்கு 56 சென்டு பாத்தியம், மற்றவர்களுக்கு எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரியாது.

2. மேற்படி 56 சென்டில் எங்களுக்கு கிரைய பாத்தியம் 14 சென்டு. அந்த 14 சென்டு சொத்தினை எனது தாயின் தந்தை குமுடன் கிரையம் பெற்றார். அவர் அழகப்பன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். 56 சென்டில் மீதமுள்ள 42 சென்டு எங்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தாத்தா குமுடனுக்கு பூர்வீக பாத்தியம் ஆகும். மேற்படி 42 சென்டு நிலம் எனது தாத்தா குமுடன் பெயரிலோ, எனது தாயார் அழகம்மாள் பெயரிலோ வருவாய் ஆவணங்கள் தாக்கலாகி இருந்தது என்பதனை காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா பெயரில் C1 என மேற்படி சொத்து தாக்கலாகி இருந்தது, அதற்கான ஆவணம் நான் தாக்கல் செய்திருந்தேன். நான் கூறுவது போல் C1ல் எவ்வளவு சொத்து அடங்கியிருந்தது என்றால் கிரைய சொத்தும், பூர்வீக சொத்தும் சேர்த்து 56 சென்டு அடங்கி இருந்தது. குமுடனுக்கு இரண்டு பெண் மக்கள் அழகம்மாள் மற்றும் கண்ணாயி ஆகியோர்கள் உண்டு. நான், எனது வழககுரையில் 41 சென்டு நிலம் எனது தாயார் அழகம்மாள் மற்றும் சகோதரி கண்ணாயிக்கு அவரது தாய் வழி பாத்தியப்பட்ட சொத்து என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

3. எனது தாயாரின் தாய் பெயர் எதுவும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவரது பெயரும் அழகம்மாள் தான். எனது தாயாரின் தாயார் அழகம்மாள் என்பவர் பெயரில் 41 சென்டு ஆதியில் இருந்தது என்பதனை காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவரது கணவர் குமுடன் பெயரில் தான் சொத்து இருந்தது. ஆதியில் 56 சென்டு நிலம் குமுடன் பெயரில் இருந்ததை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அடங்கல் தாக்கல்

செய்துள்ளேன். எனது வழக்குரையில் எனது தாயாரும், எனது சிறிய தாயாரும் வாய்மொழியாக 56 சென்டு நிலத்தினை பாகம் பிரித்துககொண்டார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். சுமார் எத்தனை ஆணடுகளுக்கு முன்பு அவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், யுடிஆருக்கு பின்பு அவர்கள் இருவரும் C1, C2 என பிரித்துக்கொண்டார்கள். குமுடன் பெயரில் உள்ள பட்டாவினை கொண்டு யுடிஆருக்கு பின்பு எனது தாயாரும், சிறிய தாயாரும் பிரித்துக்கொண்டார்கள்.

4. எனது தாயார் மற்றும் சிறிய தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள யுடிஆர் பட்டாவில் கண்டுள்ள விஸ்தீரணத்தினை வைத்துதான் எனது தாயாருக்கு 33 செண்டும், எனது சிறிய தாயாருக்கு 22 சென்டும் என நான் கூறுகிறேன் என்றால் சரிதான். எனது தாயார் மற்றும் சிறிய தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா யுடிஆர் காலத்தில் தவறுதலாக விஸ்தீரணம் கொண்டு ஏற்பட்டுள்ள பட்டா என்பதால் அதை வைத்துக்கொண்டு நான் அதில் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 கிரைய ஆவணம் எனது தாத்தா குமுடன் என்பவர் அழகப்பன் என்பவரிடம் இருந்து 14 சென்டு கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் என்னிடம் அந்த அசல் ஆவணம் இல்லை. வா.சா.ஆ-2ல் உள்ள நான்குமாலை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.379/9ல் சென்டு 87ல் நான் அனுபவித்து வருகிற நடுப்புறம் சென்டு 14 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. அதற்கு நான்குமாலாக கிழவன் குளத்திற்கு மேற்கும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் அழகப்பன் அம்பலத்திற்கு நாளது தேதியில் கிரையம் செய்த புஞ்சைக்கும் தெற்கு எனவும் காணப்படுகிறது என்றால் சரிதான். 14 சென்டுக்கு வடபுறம் அழகப்பன் அம்பலத்தின் கிரைய சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் எனது தாத்தா கிரையம் பெற்ற 14 சென்டுக்கு வடபுறம் 15 சென்டு நிலம் அழகப்பன் அம்பலத்திற்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கட்டி வரும் வீடு மேற்சொன்ன 15 சென்டு நிலத்திற்குள் அடங்கியுள்ளது என்றால் சரியல்ல. நான் எத்தனை சென்டுக்கு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6 சென்டிற்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதிகள் 2012ல் வீடு கட்டியது எனக்கு 2017ல் தெரிய வந்தது என வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ-2 ஆவணத்தில் முத்திரை தாள் 02.11.2015 வாங்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டியது 1-1/2 ஆண்டுக்கு முன்புதான் தெரிய வந்தது என எனது 20.06.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வரைபடம் வா.சா.ஆ-1ல் நடுப்புறம் உள்ள 6 சென்டில் பிரதிவாதிகள் அனுபவித்து வருவதாக நான்

சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, வீடு பாதியிலேயே கட்டிடம் நின்றுவிட்டது, நான் கட்டவிடாமல் மறுத்து விட்டேன். எந்த தேதியில் நான் அவ்வாறு மறித்தேன் என்றால் எனக்கு தேதி, வருடம் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ-1 வரைபடத்தில் பச்சை வண்ணமிட்ட இடமும், சிகப்பு வண்ணமிட்ட இடமும் சேர்த்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், எனது அனுபவத்தில் எதுவும் இல்லை என்றாலும் சரியல்ல.

7. எனது தாத்தா கிரையம் பெற்ற 14 சென்டுக்கு வடபுறம் உள்ள 15 சென்டினை கிரையம் பெற்ற அழகப்பன் அம்பலம் யார் என்றால் எனக்கு தெரியாது. அட்டபட்டி கிராம பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணனின் தந்தை அழகப்பன் அம்பலம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கிருஷ்ணனின் உடன்பிறந்தவர்கள் 5 நபர்கள். எனது தாத்தா குமுடன் உடன் பிறந்தவர்கள் யாரும் கிடையாது, அவர் ஒரே வாரிசு மட்டும் தான். வா.சா.ஆ-1 மாதிரி வரைபடத்தில் வடபுறம் யார் இடம் என்றால் அழகப்பன் வகையறாவின் பங்காளி இடம். பனையம்மாள் தந்தை பெயர் எனக்கு தெரியாது. எனது தாயார் 2012ல் இறந்து போனார். எனது தாயார் இறந்து சுமார் 3-4 ஆண்டுகள் கழித்து எனது பெயருக்கு வாரிசு சான்றிதழ் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்தேன். யுடிஆரில் எனது தாயார் பெயரில் தவறாக ஏற்பட்ட பட்டாவினை வைத்து அவர் இறந்த பின்பு எனது பெயரில் பட்டா மாற்றினேன் என்றாலும், எனது தாயாருக்கு அந்த சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. எனது தாயாருககு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் விற்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.